பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 19 செவ்வாய்க்கிழமை [05-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 336

# யாழ். குடாக்கடலில் ஒரு பகுதியை பாதுகாப்புப் பிரதேசமாக்க முயற்சி!

## ஜனாதிபதிக்கு அரச அதிபர் மகஜர்

யாழ்ப்பாணம், நவம்பர் 5

யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சூழவுள்ள கடற் பிரதேசத்தில் ஒரு பகுதியைப் பாதுகாப்புப் பிரதேசமாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் மூலம் யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மீன்பிடித் தொழிலை ஓரளவேனும் வழமை நிலைக்கு கொண்டு வரவும், மீனவர்கள் அச்சமின்றிக் கடலுக்குச் சென்று தொழில் புரியவும் வழி பிறக்கும் என நம்பப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சூழவுள்ள கடற்பிரதேசத்தில் இப்போது கடற்படைக் கப்பல்கள் மற்றும் ரோந்துப் படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. பல சந்தர்ப்பங்களில் கடற்படையினர் தொழிலுக்குச் செல்லும் மீனவர் மீது தாக்குதல்களை மேற்கொண்டும் உள்ளனர். அதனால் மீனவர் தமது தொழிலைச் செய்வது ஆபத்தானதாக மாறிவிட்டது. அச்சத்தினால் அவர்கள் கடலுக்குச் செல்வதில்லை.

தொழில் செய்ய முடியாத நிலையினால் மீனவர்கள் அன்றாட ஜீவனோபாயத்தைப் பெற முடியாது அவலப்படுகிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு கரையிலிருந்து ஆகக் குறைந்த தூரம் ஒன்றை நிர்ணயித்து, அதிக மீன்வளம் உள்ள கடற்பிரதேசத்தைத் இனங்கண்டு, குறிப்பிட்ட கடற்பகுதியை பாதுகாப்புப் பிரதேசமாக்குவதற்கான கோரிக்கை அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 100 தொன் சவர்க்காரம் நாளை கப்பலில் வருகிறது

நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'லில்லி' கப்பலில் 100 மெற்றிக் தொன் சவர்க்காரம் எடுத்து வரப்படுகிறது.

இந்தத் தகவலை கொழும்பிலிருந்து புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு யாழ். அரச அதிபருக்கு நேற்று மாலை அறிவித்திருக்கிறது.

இந்தக் கப்பலில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் அக்டோபர் மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ-8]

## காங்கேசனுக்குக் கப்பல்; இன்று கொழும்பில் மாநாடு

யாழ். குடாநாட்டுக்குத் தேவையான உணவுப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்களை காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டுவருவது தொடர்பாகவும்—

காங்கேசன்துறை துறைமுகப் பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாக்குவது சம்பந்தமாகவும்—

இன்று கொழும்பில் முக்கிய மாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது.

இந்த மாநாட்டில் கூட்டுப் படைத் தலைமையகம், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு ஆகியவற்றின் உயரதிகாரிகள் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-8)

## 'தைப்பான்' கப்பல் காங்கேசனுக்கு வரும்!

யாழ்ப்பாணம், நவ. 5

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு உணவு மற்றும் பொருள்களை ஏற்றி வருவதற்காக 'தைப்பான்' என்ற சிறிய கப்பலை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு ஒப்பந்த அடிப்படையில் ஏற்பாடு செய்திருப்பதாக அறியவருகிறது.

முதலில் இந்தக் கப்பலில் உரம் ஏற்றி வரப்படும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-8)

## படையினர் தேடுதல் கிழக்கில் தீவிரம்!

கிழக்கு மாகாணத்தில் கடந்த வாரம் விடுதலைப் புலிகள் நடத்திய தொடர் தாக்குதலில் குறைந்தது 85 இராணுவத்தினர்வரை கொல்லப்பட்டனர் என்றும் —

அதைத் தொடர்ந்து அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இராணுவ தேடுதல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஏஜென்ஸிச் செய்திகள் இத்தகவலைத் தெரிவித்தன.

அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்ச ஆறு பகுதிக்கு கூடுதலான துருப்புக்கள் நேற்று அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் —

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவத்தினரும் பொலீஸாரும் இணைந்து தாக்குதல் ஒன்றை நடத்தச் சென்றபோது அவர்கள் மீது விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தினர் என்றும்—

எனினும் அத்தாக்குதல் முறியடிக்கப்பட்டது என்றும் ஸ்ரீலங்கா அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. [உ-8]

## குச்சவெளிக்கு அருகே தாக்குதல் சம்பவம்

திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டைக்கும் குச்சவெளிக்கும் இடையே கல்லறவ என்னுமிடத்தில் வைத்து இராணுவ—பொலிஸ் கூட்டு ரோந்து கோஷ்டி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் தாக்குதல் நடத்தினர்.

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் இச்செய்தியை வெளியிட்டன.

தகவல் கிடைத்து அங்கு விரைந்து சென்ற மேலதிக பாதுகாப்புப் படையினர் விடுதலைப்புலிகளின் தாக்குதலை முறியடித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## ஜி. சீ. ஈ. (சா. த.) பரீட்சை; திட்டமிட்டபடி டிசம்பரில்!

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ். மாவட்டத்தில் 1990, 1991 ஆம் ஆண்டுகளுக்குரிய ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சைகள் திட்டமிட்டபடி எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் நடைபெறும்.

பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல யாழ். பிராந்திய கல்விப்பணிப்பாளருக்கு இவ்வாறு தகவல் அனுப்பியிருக்கிறார்.

இந்தப் பரீட்சைகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப இண்டைக்கு சவர்க்காரச் செய்தியோட கங்கா ஸ்நானம் செய்யலாம் எண்டு சொல்லுங்கோ.........!

## செஞ்சிலுவை அதிகாரிகள் தீவுப் பகுதிக்குச் செல்வர்

யாழ்ப்பாணம், நவ. 5

நெடுந்தீவு உட்பட தீவுப் பகுதிகளில் சிக்குண்ட மக்களின் நிலை எவ்வாறு உள்ளது, அவர்களுக்கு என்ன உதவிகள் செய்யப்பட வேண்டும் என்பதைக் கண்டறிவதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைச் சேர்ந்த பிரதிநிதிகள் விரைவில் அங்கு செல்லவுள்ளனர்.

தீவுப் பகுதி நிலைமை குறித்து ஆராய்வதற்காக நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது, பொது மக்கள் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்குப் பதிலளித்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளே இந்த வாக்குறுதியை அளித்தனர்.

நேற்றைய கலந்துரையாடலில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச திணைக்களங்களின் பிரதிநிதி

[8 ஆம் பக்கம் பார்க்க]

### தீபாவளி வாழ்த்து!

உதயன் தனது வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் அனைவருக்கும் தனது தீபாவளி நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறான்.

தமிழ் மக்களின் இன்றைய இருள் சூழ்ந்த நிலை மாறி, ஒளிமயமான எதிர்காலம் பிறக்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக!

## தீவகப் பகுதியிலிருந்து ஷெல், கலிபர் தாக்கு!

யாழ்ப்பாணம், நவ. 5

மண்டைதீவு, பூவரசம் தீவுப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று அதிகாலை 12-30 மணிக்கு மாணவபுரம், குருநகர் பகுதிகளை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனிடையே—

தீவகப்பகுதியில் இருந்து நேற்று முன்தினம் இரவு 7 மணி முதல் அராலிப்பகுதியை நோக்கி கடும் ஷெல் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை காரைநகர் கடற்படை முகாமில் இருந்தும் பொன்னாலைப் பகுதியை நோக்கி தொடர்ச்சியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. (உ-15)

## தீவகத்தில் 2,000 பேர் சிக்கியுள்ளனராம்!

யாழ்ப்பாணம், நவ. 5

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில்மட்டும் இரண்டாயிரம் பேர் இராணுவத்தினரிடம் சிக்கியுள்ளனர். இவர்களில் புங்குடுதீவைச் சேர்ந்தவர்கள் ஆயிரத்து 400 பேர்.

தீவுப் பகுதிகளின் நிலைமை குறித்து ஆராய்வதற்காக நேற்று யாழ். நகரில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இத்தகவல் வெளியானது.

அங்கு கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட ஏனைய விடயங்கள், விவரங்கள் வரு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்புக்கு வெடிகுண்டுகளை புலிகள் கொண்டு வந்துள்ளனராம்!

## அரசின் உளவுப் பகுதிக்கு தகவல்

சார்க் மாநாடு நடைபெறும் வேளையில் கொழும்பில் வெடிக்க வைப்பதற்காக—

யாழ்ப்பாணத்தில் இருந்து வெங்காயம் ஏற்றி வரும் லொறிகள் மூலம் வெடிகுண்டுகளை மறைத்து கொழும்புக்கு புலிகள் கொண்டுவந்திருக்கின்றனராம்.

—இவ்வாறு தங்களுக்கு உளவுத் தகவல்கள் கிடைத்திருப்பதாக ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனை அடுத்து நகருக்குள் நுழையும் சகல வாகனங்களையும் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்திய பிறகே படையினர் அனுமதிக்கின்றனர் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சார்க் மாநாட்டைக் குழப்ப விடுதலைப் புலிகள் தலைநகரில் வெடிகுண்டுகளை வெடிக்கக்கூடும் என பாதுகாப்புப் படையினர் சந்தேகிப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவித்திருக்கிறார். [உ-எ]

## கொழும்பில் பாதுகாப்பு தீவிரம் கட்டாக்காலிகளும் நடமாடத்தடை!

கொழும்பு, நவ. 5

நாளை மறுதினம் கொழும்பில் சார்க் உச்சி மாநாடு ஆரம்பமாவதை ஒட்டி கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. கட்டாக்காலிகளும் நடமாடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நகரிலிருந்து பிச்சைக்காரர்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

ட்ரக்குகள் மற்றும் லொறிகள் தலைநகருக்குள் செல்வது [illegible] தலைநகர் முழுவதும் இயந்திரத் துப்பாக்கிகளுடன் பொலீஸார் ரோந்து புரிந்து வருகிறார்கள்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து கொழும்புக்கு வரும் 35 கிலோ மீற்றர் நீள வீதியின் இரு புறமும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

## மிதிவெடியில் சிக்கிய படையினர்

யாழ்ப்பாணம் நவ 5

பூநகரி செட்டியகுறிச்சியில் நிலைகொண்டிருந்த படையினர் நேற்றுக் காலை செட்டியாகுறிச்சி சந்திவரை முன்னேறியபோது அப்பகுதியில் விடுதலைப் புலிகளினால் வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளில் அவர்கள் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ரைப்றைட்டர் Portable ஆங்கிலம், ரெமிங்டன், ஒலிம்பியா, பிறதர் மற்றும் ரைப்ரைட்டர்கள் உடன் விற்பனைக்கு உண்டு (விற்பனைக்குப் பின் உத்தரவாதம் உண்டு.) பியூரோ, 39/17 மின்சார நிலைய வீதி. 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம் (சி/0780)

தமிழ் (ரெமிங்டன்) தட்டச்சு இயந்திரமும் மற்றும் ஆங்கில தட்டச்சு இயந்திரங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு M சுஜீவன் 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (18675)

## தவறிவிட்டது

ஒட்டகப்புலம், முறிவு நெரிவு வைத்தியர் பெனடிக்ற் செல்லப்பா என்பவருடைய நீல நிற சூட்கேஸ் உடுப்புகளுடனும் பேரி மாக்றட், பெனடிக்ற் லொறின் வனஜா, ஆகியோரது அடையாள அட்டைகளும் ஓமந்தை - மன்னார் முதல் பஸ்ஸில் ஜெற்றிக்கு வரும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செல்லப்பா, பிரதான வீதி, ஆவரங்கால் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (4376)

1-11-91 அன்று கொம்படிப் பிரயாணப் பாதையில் வள்ளத்தில் ஏறுவதற்காக வரும்போது பெறுமதியான பொருள்கள் அடங்கிய எனது பிரயாணப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து வ. முருகேசு 103, கனகரெட்னம் வீதி, அரியாலை மேற்கு என்ற முகவரியில் அல்லது முத்திரைச் சந்திப் பணிமனைக்கு வரத்தக தொடர்பகத்தில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். (18666)

16-10-91 அன்று ஓட்டுமடம் வீதிக்கும் பழைய ரவுணுக்கும் இடையில் வீட்டுத் திறப்புகள் 8 தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சவிதா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [18672]

## நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமந்தர் நோவு எண்ணெய் எஸ். ரி. மெடிக்கல்ஸ் 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (4326)

## சனிமாற்றம்

28 10 91 சனி மாற்றம் ரூ 7/- தீபவளி வெளியீடு எங்கும் விற்பனையாகின்றது. [ரகுநாதையர் வாக்கியப் பஞ்சாங்கப்படி கணிக்கப்பட்டது] எழுதியவர்: சுதர்ஸன், தங்கம் ஸ்ரோர்ஸ் முத்திரைச் சந்தையடி, நல்லூர். (18578)

## திருமண சேவை

எம்மிடம் வெளிநாட்டு விரிவுரையாளர், I. C. M. A. பெண் எக்கவுண்டன், ஆசிரியர்கள், [சைவம்] ஜாதகக் குறிப்புகள் உண்டு. தொடர்பு: கடிதமூலம் அல்லது நேரில். விநாயக திருமண சேவை, 53/5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம். [18667]

சகல தொழில்களிலும் மணமகன்மார் உள்ளனர். எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ் வீதி, மல்லாகம். (4378)

## இடமாற்றம்

வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் சிகிச்சை அளித்து தொடர்கிறார். சகல நோயாளர்களும் வழமைபோல் சிகிச்சை பெறலாம். இடம் பெயர்ந்தோருக்கு சலுகை அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்படும் [18590]

யாழ் பல்கலைக்கழகம் பௌதிக விஞ்ஞான பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கான தூய கணிதம் (P. M. G. 32) பரீட்சை பிற்போடல்

மேற் கூறப்பட்ட பரீட்சை முன்னர் அறிவிக்கப்பட்டது போல் 06 - 11 - 1991 இல் நடைபெறாது என்பதையும் இப் பரீட்சை 11 - 11 - 1991 முற்பகல் 9.00 மணிக்கு கணிதப் பிரிவு மண்டபத்தில் நடைபெறும் என்பதையும் மூன்றாம் வருட பௌதிக விஞ்ஞான மாணவர்களுக்கு அறியத்தருகிறேன். 11 - 11 - 1991 இல் நடைபெற இருக்கும் BG 19, CS 08, ZS 05 PS 06, MS 09, STS 03 பாடங்கள் இரசாயனவியல் விரிவுரை மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளன எனவும் அறியத்தருகிறேன்

– பதிவாளர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், திருநெல்வேலி. [சி 0880]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 25 — 01 — 1921

மறைவு: 15 — 11 — 1990

### அமரர் ச. நா. மயில்வாகனம்

(பிரபல வர்த்தகர் - ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ், பண்டாரவளை)


திதி: 05-11-1991

குடும்ப ஒளியாக, குலவிளக்காக சுடர்விட்டு, வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, எம்மை வாழ் வித்த அன்புத்தெய்வமே! உங்களைப் பிரிந்து துன்ப இருளில் தவிக்கின்றோம். காலம் பல கடந்தாலும் உங்களை நாம் மறவோம் ஐயா!

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ம. குகபாலன், 29 வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (18659)

## காணவில்லை




### சந்திரன் உதயகுமார் (உதயன்)

குளமன்கால், மல்லாகத்தைச் சேர்ந்த சந்திரன் உதயகுமார் என்பவரை 29 - 10 - 91 இல் இருந்து காணவில்லை. இவருக்கு 26 வயது, உயரம் 5½ அடி, பொதுநிறம், மனநிலை சிறிது பாதிக்கப்பட்டவர். இவரை யாராவது கண்டால் பசுபதி சந்திரன், குளமன்கால், மல்லாகம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

[18669]

## ஆறாவது ஆண்டு நினைவலைகள்



இவ்வுலகு: 2 — 6 — 1934

மறுவுலகு: 5 — 11 — 1985

### அமரர் தம்பு மாசிலாமணி

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

ஆறாவது ஆண்டை அடைந்தாலும் எம் கவலை
ஆறாது; ஆறாது அழுதாலும் தீராது!
மாறாத நோய்களுக்கு மரணந்தான் மருந்தென்று
மறுவுலகை நினைத்தீர்கள்; மன அமைதி
பெற்றீர்கள்!
மாறாக எம் அமைதி மகிழ்ச்சியெலாம்
மறைந்ததன்றோ!
மறைந்தாலும், மறைந்திருந்து எம் வாழ்க்கை
உயர்வதற்கு,
நூறாக, நூறாக ஆசிகளைத் தருவீர்கள்!
நூல் கற்று நாம் பெற்ற வளர்ச்சி கண்டு
மகிழ்வீர்கள்!

– குடும்பத்தினர்.

கோவியம்பாதி, கொற்றாவத்தை. (18671)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



படைப்பு: 9 — 11 — 1952

அழிப்பு: 21 — 10 — 1987

### அமரர் சோ. யோகசுந்தரம்

(முன்னைநாள் தபால் தந்தி ஊழியரும், யோகா மினிபஸ் உரிமையாளரும்)

திதி: 5 — 11 — 1991

ஈரிரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஈடில்லா அன்பு கொண்ட உன் நினைவு
நிரந்தரமாய் எம் நெஞ்சில் என்றும்
நீங்காது நித்தமும் பிரகாசிக்கும்.

– குடும்பத்தினர்.

"யோகா இல்லம்", 24/3, 2 ஆம் குறுக்கு வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம். [18429]

## வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பம்

கொழும்பு நவ. 5 சார்க் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு இன்று செவ்வாய் காலை 9 மணிக்கு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டுமண்டபத்தில் ஆரம்பமாகின்றது.

மாநாட்டில் பங்குபற்றுவதற்காக பாகிஸ்தான், மாலைதீவு ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் நேற்றே கொழும்பு வந்து சேர்ந்தனர்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்திய மத்திய வெளியுறவு இணை அமைச்சர் எட்வர்டோ பெலரோ நேற்று மாலை புதுடில்லியில் இருந்து கொழும்புக்குப் புறப்பட்டார். [உ-ள]

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 27 - 12 - 1965

மறைவு: 27 - 10 - 1987

திதி: சதுர்த்தசி 5 - 11 - 1991

### செல்வன் சுப்பிரமணியம் சுந்தரேஸ்வரன்

[சந்திரன்]


அன்பின் சந்திரனே!

ஆண்டு நான்கு ஓடி மறைந்தாலும் உன் நினைவோ ஓடி மறையவில்லையடா! சந்திரன் நீ இல்லாத நாங்கள் சந்திரனே இல்லாத வானம். இருண்டு கிடக்கும் எம் இதயமெல்லாம் உன் நினைவே தேய்யாத சந்திரனாய் நின்று தேற வைக்கிறது. எங்கள் செல்வமே யாண்டு மடைக உன் ஆத்மா.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்,
சிறிய தந்தையர், சிறிய தாய்மார்,
மாமன்மார், மாமிமார், மச்சான்,
மச்சாள்மார், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

இணுவில் மேற்கு, இணுவில். (18435)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### சரவணமுத்து செல்வராசா

(மாமா)

(சாவகச்சேரி வர்த்தக சங்க முன்னாள் செயலாளரும், பிரபல வர்த்தகரும்)

அன்னையின் மடியில்: 25 - 11 - 1951

அநியாயர் வெடியில்: 05 - 11 - 1988

திதி: 03 — 11 — 1991

மண்ணை நேசித்தாய், மரணத்தை அரவணைத்தாய், உன்னைப் பிரித்திட்ட பயவர்கள் இருந்த இடம் தெரியாமல் ஓடினர்! தம்பியவர். தரணி அதிசயிக்க வெற்றி கொண்டு, இறுக்கர் வேரழியப் பொருதி நின்றார்! ஈழம் மலரும், இனிய உன் கனவுகள் அலரும், உன் ஆத்ம சாந்திக்கு இறைஞ்சுகிறோம்.

மனைவி, மக்கள்.

நுணாவில் மத்தி, சாவகச்சேரி. [18656]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மனங்களில் தீபம் ஏற்றுவோம்!

இன்று தீபாவளித் திருநாள். இந்து சமயத்தவரின் விசேட பண்டிகைகளில் ஒன்று. மனிதனின் மனதில் இருள் கவ்வச் செய்யும் ஆணவம், அக்கிரமம், அநியாயம் ஆகியவற்றை அழித்து, பரம சோதியான ஒளி ஏற்றப்பட வேண்டும் என்ற தத்துவத்தைப் புகட்டி, அதனை மக்கள் மனதில் பதிப்பதற்காக எழுந்த கொண்டாட்டம்.

ஆனால் அந்தப் பண்டிகையின் அடிப்படையாக உள்ள தத்துவத்தைப் புரிந்து கொள்ளாமல், குடித்துக் கும்மாளம் போட்டு, வேண்டாத வினைகளை விலைக்கு வாங்கியே இதுவரை பல தீபாவளிகள் கொண்டாடப்பட்டன. ஒரு சிலர் மட்டுமே தத்துவம் புரிந்து, அன்றைய தினம் ஆலய தரிசனம் செய்து, ஏழைகளுக்கு உதவி, அடக்கமாகக் கொண்டாடி தங்கள் இதய இல்லங்களில் ஒளி விளக்கேற்ற முயன்றனர்.

ஆனால் கடந்த வருடமும், இன்றும் தீபாவளியை டாம்பீகமாக, வெறும் வெளி வேடத்துக்காக — போலித்தனமாக — கொண்டாடுவோருக்கு அப்படிச் செய்ய முடியவில்லை

கடந்த [1990 ஆம்] வருடத்தில் தொடங்கிய யுத்தம் இன்னும் ஓயவில்லை; தணிந்து போகும் அறிகுறி தானும் இல்லை. அதனால் சென்ற வருடம் போலவே, இன்றும் மிகவும் நெருக்கடி மிகுந்த சூழ்நிலையில் தமிழர்கள் தீபாவளி நாளை எதிர்நோக்குகிறார்கள். கடந்த ஆண்டைவிட இம்முறை கஷ்டங்களும், வேதனைகளும் மேலும் அதிகரித்துள்ளன, பெருகியுள்ளன என்று கூறலாம்.

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த தமிழர்களின் எண்ணிக்கை, சென்ற வருடத்தை விட இப்போது அதிகம். அவர்கள் தங்கள் இல்லங்களை இழந்து அகதி முகாம்களில் பல வேதனைகளுக்கும், சோதனைகளுக்கும் மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள்.

இடம்பெயராத மக்களுக்கு, சொந்த வீடுகளில், உறவினர் வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு இன்னல்களும், இடர்களும் இல்லை என்பதல்ல. உயிர் வாழ்வதற்கு முதலாவது அடிப்படைத் தேவையான, அத்தியாவசியமான உணவுப் பொருள்களே கிடைக்காத நிலையில் எல்லோரும் கஷ்டப்படுகிறார்கள். ஏனைய துன்பதுயரங்களை, வேதனைகளை அடுக்க வேண்டியதில்லை.

ஆகையால் இம்முறையும் ஈழத் தமிழர் பிரதேசங்களில் தீபாவளி கொண்டாட வாய்ப்பில்லை. ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினர் தானும் பண்டிகைப் பகட்டுக் காட்ட முடியாத நிலை இதுவும் ஒரு வகையில் நல்லது தான் ஈழத் தமிழ் மண்ணில் எல்லோரும் சமமானவர்கள் என்ற ஒரு புதிய நிலையை உருவாக்கி இருக்கிறது. பணம் படைத்தவர்கள் பண்டிகையைக் கொண்டாட, நிதி வசதி இல்லாதவர்கள் பார்த்து மனம் ஏங்கும் நிலை இல்லாமற் போகிறது

இன்றைய தீபாவளியை தெய்வ தரிசனம் செய்வதோடு, தமிழர்களின் இன்னல்கள் நீங்க வேண்டும்— அதற்கான ஆதரவை நல்க வேண்டும்— என்ற தூய சிந்தனையோடும் எல்லோரும் ஒரே உணர்வுடன் கழிப்போமாக. அதன் மூலம் ஒவ்வொருவர் மனதிலும் சமூக உணர்வு என்ற ஒளியை - தீபத்தை- ஏற்ற ஏதுவாகும்.

## மற்றும் ஒருவர் கைது

வேதாரணியம் அருகே தீர்த்தக்குடிக்குச் சமீபமாக விடுதலைப் புலிகள் ஆதரவாளர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரை தமிழ்நாடு பொலீஸார் கைது செய்தனர்.

கைதானவரிடம் இருந்து நாட்டு வெடிகுண்டு கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-த)

## வலி. தெற்கு வர்த்தகர்களுக்கு விவரம் அறிவிக்கக் காலக்கெடு

யாழ்ப்பாணம், நவ. 5

வலிகாமம் தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள தனியார் துறையைச் சேர்ந்த மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும் தங்கள் வசம் உள்ள அத்தியாவசிய உணவுப்பொருள்கள் பற்றிய விவரங்களை இம்மாதம் ஏழாம் திகதிக்கு முன்னர் அறிவிக்க வேண்டும். அன்று பி. ப. 2 மணிக்கு முன்னர் விவரங்களை அறிவிக்கத் தவறும் வர்த்தகர்களின் பொருள்கள் பதுக்கல் பொருள்களாகக் கணிக்கப்படும் என்று உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார். (அ)

## மாவீரர் நாள் பேச்சுப்போட்டி

யாழ்ப்பாணம், நவ. 5

மாவீரர் நாளை ஒட்டி பாடசாலை மாணவர்களிடையே பேச்சுப்போட்டி ஒன்றை விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் ஒழுங்கு செய்திருக்கிறது.

ஆறாம் ஆண்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்காக பாடசாலை, கொத்தணி, கோட்ட மட்டத்தில் போட்டிகள் நடாத்தப்படும். பாடசாலை மட்டப்போட்டிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

இந்தப்போட்டி இறுதியாக மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## தீவகத்தில் படையினர் அடாவடித்தனம்

யாழ்ப்பாணம், நவ. 5

தீவகத்தில் முகாமிட்டுள்ள படையினர் அங்கு அடாவடித்தனமான செயல்களில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் உள்ள— 30 வயதுக்குட்பட்ட — ஆண்கள் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்; வயோதிபர்கள் தாக்கப்படுகின்றனர்.

நேற்று முன்தினம் புங்குடுதீவில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும்—

அவரது வீடு கொள்ளையிடப்பட்டதாகவும் கூறப்பட்டது.

புங்குடுதீவில் உள்ள மக்கள் பாடசாலை ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-8)

## பூநகரிப் படையினர் மீனவர் மீது சூடு!

யாழ்ப்பாணம், நவ. 5

பூநகரி, மண்ணித்தலை பகுதிகளில் முகாமிட்டுள்ள படையினர், சிறுத்தீவின் தென்கரையோரக் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றும், நேற்றுமுன்தினமும் இவ்வாறு மீனவர்கள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும்—

தெய்வாதீனமாக எவரும் பாதிக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-8-81]

## அதிபர், ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 5

மருதனார்மடம், வடமராட்சி கல்விக் கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் நாளையும், நாளை மறுதினமும், வெள்ளிக்கிழமையும் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவிருக்கின்றன.

ஏழாலை, சுன்னாகம், உடுவில் கொத்தணிகளில் கடமையாற்றுபவர்களை நாளை இராமநாதன் கல்லூரியிலும் —

வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, கரவெட்டி, நெல்லியடி கொத்தணிகளில் கடமையாற்றுபவர்களை நாளை மறுதினம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் —

புலோலி, உடுத்துறை, பருத்தித்துறை கொத்தணிகளில் கடமையாற்றுபவர்களை வெள்ளிக்கிழமை வட. இந்து மகளிர் கல்லூரியிலும் கூடுமாறு கோரப்பட்டுள்ளது. (உ-8)

## கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டுவர தொண்டர் நிறுவன இணையம் முயற்சி

யாழ்ப்பாணம். நவ 5

''தேவையான பொருள்களைக் கப்பல் மூலம் யாழ். மாவட்டத்துக்கு எடுத்து வருவதற்கு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கொழும்பில் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது. விரைவில் அது சாத்தியமாகும்''.

—யாழ். குடாநாட்டுக்கான தரைவழிப் போக்குவரத்து தடைப்பட்டிருப்பதால் அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதா என்று கேட்டபோது இணையத்தின் பிரதிநிதி ஒருவர் இவ்வாறு பதிலளித்தார்.

இணையம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு நேற்று இணையத்தின் அலுவலகத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

கடந்த ஒருவருட காலத்தில் இணையம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி இச்சந்திப்பின்போது விளக்கமளிக்கப்பட்டது. (உ-8)

## மீண்டும் ஸ்ரீகாந்த்

சென்னை, நவ 5

ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் இந்திய கிரிக்கெட் அணியில் இந்தியாவின் முன்னாள் கப்டனும் தமிழக வீரருமான கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்தும் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

அஸாருதீன் தலைமையில் செல்லும் இந்த அணியில் ... காந்த் ... ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். [உ-த]

ராஜீவ் கொலைச் சம்பவம்:

## புலிகள் சம்பந்தப்பட்டதற்கு தடயம் கிடைத்துவிட்டதாம்

### தமிழ்நாடு பொலீஸார் தெரிவிப்பு

சென்னை, நவ. 5

ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பதை திட்டவட்டமாக எடுத்துக் காட்டும் மற்றுமோர் தடயம் தமிழ்நாடு இரகசியப் பொலீஸாரிடம் சிக்கி உள்ளதாம்.

தலைவர் பிரபாகரனுக்கு சாந்தன் என்ற முக்கிய புலிகள் இயக்க உறுப்பினர் எழுதிய கடிதமே அந்தத் தடயம் என்று தமிழ்நாடு பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

திராவிட கழக உறுப்பினரான இரும்பொறை அல்லது துரைசிங்கம் என அழைக்கப்படும் ஒருவரிடம் இருந்து, இக்கடிதம் கைப்பற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரபாகரனுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர் எனக் கூறப்படும் இரும்பொறை புலிகளின் தீவிர ஆதரவாளர் என்றும் —

கடந்த மாதம் 4 ஆம் திகதி வேறு 3 புலிப் போராளிகளுடன் இராமேஸ்வரத்திலிருந்து யாழ்ப்பாணம் சென்றபோது, இவர் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. [இ-த]

## யாழ். கல்வி அபிவிருத்திக்கு மூன்றாண்டுத் திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ். மாவட்ட கல்வி அபிவிருத்திக்கான மூன்றாண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பது சம்பந்தமான ஆய்வுகள் நேற்று ஆரம்பமாகின.

ஆய்வின் முதற் கட்டமாக யாழ். மாவட்டத்தின் ஆறு கல்விக் கோட்டங்களிலும் உள்ள வளம், ஆளணி ஆகியவை பற்றிய விவரங்கள் திரட்டப்படவிருக்கின்றன.

இந்த விவரங்களைத் திரட்டுவது தொடர்பாக சம்பந்தப்பட்டோருக்கு பயிற்சியளிப்பதற்கான திட்டம் நேற்று வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்தினால் யாழ். இந்துக்கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது

கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட சுமார் 100 பேருக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படவிருக்கிறது. [உ-3]

## உள்ளூராட்சி ஊழியர் இடமாற்றம் விவரப் பட்டியல் வெளியானது

யாழ்ப்பாணம். நவ. 5

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி சேவை ஊழியர்களுக்குரிய அடுத்த வருடத்துக்கான இடமாற்றப் பட்டியல் வெளியாகியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் உள்துறைப் பிரதிச் செயலாளர் இந்த இடமாற்றப் பட்டியலை கடந்த மாதம் 18 ஆம் திகதி வெளியிட்டிருந்தார்.

இந்த இடமாற்றங்கள் வடபகுதியில் இயங்கிவரும் தொழிற்சங்கங்களைக் கலந்தாலோசிக்காமல் இடமாற்ற சபையினரால் எதேச்சாதிகாரமாகத் தயாரிக்கப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தினர் இந்த இடமாற்றப் பட்டியலுக்கு ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்கள். இடமாற்ற சபைக் கூட்டத்துக்கு வருமாறு தமக்குக் கடிதம் தானும் அனுப்பப்படவில்லை என்று அதன் தலைவர் திரு. ஏ. பாலசுந்தரம் தெரிவித்தார்.

உள்துறைப் பிரதிச் செயலாளரின் அறிவித்தலில், இடமாற்றம் சம்பந்தமான சகல மேன்முறையீடுகளும் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

மொத்தம் 90 ஊழியர்கள் இம்முறை இடமாற்றப்பட்டுள்ளனர். வடபகுதியில் பணிபுரியும் பலர் கிழக்குக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். [அ]

## யாழ். குடாக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுவிடயத்தில் யாழ் அரசாங்க அதிபரும், தொண்டர் நிறுவனம் ஒன்றின் அதிகாரிகளும் முனைப்புடன் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

எந்தெந்தக் கடற்பகுதிகளைப் பாதுகாப்பு வலயமாக்க வேண்டும் என்பது சம்பந்தமான மகஜர் ஒன்றையும், தொடர்புடைய வரைபடங்களையும் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார். யாழ் மாவட்ட மீனவர்கள் பட்டினி நிலையில் வாழ்வது குறித்தும் அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக அறிய வருகிறது [அ 8]

## செஞ்சிலுவை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு தினமும் மக்கள் பற்றிய தகவல்கள். அங்குள்ள நிலைமை குறித்து விரிவாக ஆராயப்பட்டது. வயோதிபர்களையும், நோயாளர்களையும் அழைத்து வருவது குறித்தும் ஆராயப்பட்டது. (அ-18-111)

## ஜி. சீ. ஈ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்பாக — இங்கிருந்து அனுப்பப்படவேண்டிய—ஆவணங்களை எடுத்துக்கொண்டு வடபிராந்தியக் கல்வி பணிப்பாளர் நாளை கொழும்பு செல்லவிருக்கிறார்.

இப்பரீட்சையை நடத்துவதற்காக, 256 பரீட்சை நிலையங்களைத் தெரிவுசெய்யும் வேலைகள் தற்போது யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற்று வருகின்றன. [உ-3]

## தீவகத்தில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாறு:-

★ காரைநகரில் சுமார் ஆயிரம்பேர் உள்ளனர். அங்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்ட ஓர் உதவி அரசாங்க அதிபர், இரு கிராமசேவகர்கள் ஆகியோர் சிவில் நிர்வாக வேலைகளைச் செய்து வருகின்றனர். கடிதங்கள் கடற்படையினரின் தணிக்கையின் பின் கொழும்பு மூலமாக அனுப்பப்படுகின்றன. பணத் தட்டுப்பாடு உண்டு என்று பலருக்கு கடிதங்கள் வந்துள்ளதாகக் கூறப்பட்டது. அங்குள்ள வயது முதிர்ந்தவர்கள் பராமரிக்க உறவினர் இல்லாது அல்லற்படுகின்றனர்

★ ஊர்காவற்றுறையில் சுமார் 100 குடும்பங்கள் வரை சிக்கியுள்ளதாகக் கூறப்பட்டது. படையினரிடம் சிக்கிய சமூகசேவை அதிகாரி, அங்கு தற்காலிக உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

★ வேலணை பலநோக்கு சங்கம் 65 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களையும் புங்குடுதீவு பலநோக்கு சங்கம் 70 லட்சம் பெறுமதியான உணவுப் பொருள்களையும் கைவிட்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அந்தப் பொருள்களின் நிலை பற்றி அறிந்து வருமாறு செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரப்பட்டது [அ-18-111]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோடிப் பரீட்சை நாளை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், நவ. 5

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜி. சி. ஈ. (சாதாரண) தர பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள் நாளை முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை யாழ். மாவட்டத்தில் நடைபெறவிருக்கின்றன.

240 நிலையங்களில் நடைபெறும் இந்தப் பரீட்சையில் 17 ஆயிரம் மாணவர்கள் தோற்றுகிறார்கள்.

யாழ். கோட்டத்துக்குப் பட்ட பாடசாலைகளுக்கான வினாத்தாள்கள் இன்று காலை 9 மணி முதல் வழங்கப்படும் என்று கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. வி. வேலாயுதம் அறிவித்துள்ளார். [உ-3]

## தொடரும் நினைவுகள்
## நான்காம் ஆண்டு

காலத்தின் மலர்வு: 31 - 12 - 1938

அன்னியரால் உயிர் பறிப்பு: 21 - 10 - 1987

திதி நாள்: 05-11-1991

### திரு. வை. சண்முகலிங்கம்

[யாழ். போதனா வைத்தியசாலை சாரதி]

உயிர் காக்கும் மருத்துவமனையின் மரபு மீறி அன்னியரால் உங்கள் இனிய உயிரும் பறி போனதோ. உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

சிவகுமார் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (18433)

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மாமன், மாமி.

## 116ஆம் நாள் நினைவஞ்சலி



### 2 ஆம் லெப்டினன்ட்
### வீரவேங்கை கவி
### (ஜீவரெட்ணம் ராஜி)

அன்னையின் மடியில் வீர ஜனனம்: 08 - 12 - 1969

தமிழ் தாயின் மடியில் வீர மரணம்: 13 - 07 - 1991

தமிழீழ வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஆனையிறவு முகாம் முற்றுகையின் நேரடி மோதலில் தன் உயிரை தமிழிற்கும், உடனை தமிழ் மண்ணுக்கும் அர்ப்பணித்த மாவீர வேங்கை கவி - ராணி, ராஜிக்கு எங்கள் உள்ளம் கனிந்து நிறைந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

காலமெனும் காலனுடன் காற்றாய் கலந்துவிட்ட காவியக் கவியே? தமிழீழம் என்னும் யாகத்தீயிலே சென் நெருப்பானவளே! 'அஞ்சிடோம், அஞ்சிடோம், தமிழீழம் தனை காத்திட அஞ்சிடோம். மிஞ்சிபது உயிரானாலும் அதையும் கொடுத்திட அஞ்சிடோம்' என்றாயே?

தூங்கிய தமிழினமே துடித்து எழுந்திடு! ஏங்கியே நிறகும் தமிழ் அன்னை தனை காத்திட ஏந்திடு ஆயுதம் தனை! ஆதவன் போல் எம் அண்ணன் இருக்கிறான் அஞ்சாதே களம் தனை நோக்கி ஓடு! களப் புலியாக மாறிடு! தமிழீழம் தனைக் காத்திடு! என்றாயே!

ஏங்கியே நிற்கிறோம். உன் தியாகம் தனைக் கேட்டவுன் தாங்கியே நிற்கிறோம் உன் பிரிவுத் துயர்தனை.

மாவீரராகிவிட்ட கவி எழுதிய கவிதைகள் சில:-

மரணம் ஓர் சிறந்த சமத்துவவாதி
இரு உண்மையான நண்பர்களிடையே
உள்ள அன்பு இதய தூய்மையானது
எல்லையற்றது, அழிவற்றது.

மண்மீட்புக்காக மாண்டுபோன மாவீரவேங்கைகளே
என் உடன் பிறப்புக்களே நீங்கள் மீண்டும்
எழுவீர்கள் தமிழுக்காக
மீண்டும் மலர்வீர்கள் தமிழீழத்தில்.

நினைவு கூருவோர்:

உதயசூரியன் சனசமூக நிலையம்

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. [18431]

## செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 5

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சையின் சங்கீத, நடன பாடங்களின் செய்முறைப் பரீட்சைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைக்குத் தோற்ற உள்ள மாணவர்களின் அனுமதி அட்டைகள் அவர்கள் விண்ணப்பித்த பாடசாலைகளில் வைத்து வழங்கப்படும். [உ-5]

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 5

இசைத்துறைச் சேவையில் ஐம்பது ஆண்டுகள் நிறைவைப் பாராட்டு முகமாக நாதஸ்வர மேதை என். கே. பத்மநாதனுக்கு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் தேவஸ்தானத்தில் சேவை நலம் பாராட்டுவிழா ஒன்று நடைபெறுகிறது.

இந்த வைபவத்தில் விசேட நாதஸ்வர நிகழ்ச்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [இ]

## கம்யூனிஸ்ட் தலைவர் சுட்டுக் கொலை

சண்டிகார், நவ. 5

மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சியின் பஞ்சாப் மாநிலத் தலைவர் சர்வத்சிங் சீமாவும் அவரது ஐந்து பாதுகாப்பு அதிகாரிகளும் சீக்கியத் தீவிரவாதிகளால் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

## அமைச்சர் அறிவிப்பு

சகல அரச ஊழியர்களுக்கும் ஒரே விதமான விதிகளின் கீழ் பதவி உயர்வு, இடமாற்றம் வழங்கப்படவுள்ளன.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா இத்தகவலை வெளியிட்டார். [த-எ]


The College of Higher Studies
ஆனைப்பந்தி.
தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புகள்
பகல் நேர வகுப்புகள் 9-00 — 1-00
சனி, ஞாயிறு வகுப்புகள் 9-00—6-00
அனுமதிக்கு முந்துங்கள்.
[இ-0776]

O/L Paper Class
இன்று ஆரம்பம்
ஸ்ரார் - அரியாலை
கணிதம்
திரு V. T. ராஜேந்திரா
5-11-91 பி.ப 4 மணி
(18665)

SHAMROCK
கல்வி நிறுவனம்
சுண்டிக்குளி.
A/L 93
ஆரம்பமாகியுள்ளது.
PURE/APP. MR. கமலசிங்கம்
PHY. MR. சௌந்தி
CHE. MR. செல்வா
ZOO. MR. அருள் - ஞானேந்திரன்
BOT. பிரபல ஆசிரியர்.
[18668]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அலுவலகத்தில் 5-11-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நான்கு கால்கள், நான்கு கைகளுடன் நேற்றிரவு பிறந்த அதிசயக் குழந்தை

யாழ்ப்பாணம், நவ. 5

நான்கு கால்கள், நான்கு கைகளுடன் அதிசயக் குழந்தை ஒன்று நேற்றிரவு 8.30 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் பிறந்தது.

பிரசவமாகி 10 நிமிடங்களிலேயே அச்சிசு இறந்துவிட்டது.

சாவகச்சேரி அப்பைச்சிமாவடியைச் சேர்ந்த இளம் தாய் ஒருவரே தனது முதல் பிரசவத்தில் இக்குழந்தையைப் பிரசவித்தார்.

குழந்தைக்கு ஒரு தலையும், நெஞ்சுப் பகுதியும், வயிற்றுப் பகுதியும் காணப்பட்டன.

இடுப்பின் கீழ் குழந்தையின் உடற்பகுதி இரண்டாகப் பிரிந்து நான்கு கால்களும், ஆண், பெண் உறுப்புகளும் காணப்பட்டன. [உ-15]

## மத்திய கிழக்கு சமாதானப் பேச்சு; முறிவடைந்ததாக அறிவிப்பு

மட்றிட், நவ. 5

மத்திய கிழக்குச் சமாதான மாநாட்டின் ஓர் அங்கமான இஸ்ரவேல் — சிரியப் பிரதிநிதிகளின் நேரடிப் பேச்சுவார்த்தை முறிவடைந்தது.

இப்பேச்சுவார்த்தை ஐந்து மணித்தியாலங்கள் நடந்த போதிலும் எவ்வித முடிவும் இல்லாமல் எந்த ஒரு விடயத்திலும் இணக்கம் காணாமல் முடிந்ததாக இருதரப்பாரும் தெரிவித்தனர்.

இப்படியான சில தடைகள் வந்தாலும் சமாதானப் பேச்சுக்கள் தொடரும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. பேக்கர் தெரிவித்தார். [அ]

## மரண அறிவித்தல்கள்

### திரு. வேலுப்பிள்ளை சுப்பையா

வேலுப்பிள்ளை சுப்பையா 4-11-91 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார். இவர் புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 10 ஆம் வட்டாரம் கண்ணகையம்மன் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற செல்லமுத்துவின் அன்புக் கணவரும், கணேஸ் [கொழும்பு ஆமர் வீதி வர்த்தகர்], மனோன்மணி, குணபாலலெட்சுமி [பூமணி], வரதலெட்சுமி, காலஞ்சென்ற கந்தசாமி [காந்தி], கனகலிங்கம் [கொழும்பு வர்த்தகர்], மகாதேவன் [கொழும்பு வர்த்தகர்] வடிவேல் [சுவிஸ்லாந்து] காலஞ்சென்ற சரஸ்வதி, நாகலெட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் பொன்னம்பலம் [அம்பாள் ரேடிங் கம்பனி, கொழும்பு], தியாகராசா [கிளிநொச்சி வர்த்தகர்] சுவாமிநாதன் [ஜோதி அன் கம்பனி கொழும்பு], சிவராஜா [தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர், சுன்னாகம்], வடிவாம்பிகை, போகம், விஜயலெட்சுமி, ரஞ்சினி, நவலீலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 5-11-91 புதன்கிழமை 10 மணியளவில் 71/5, அரசடி றோட், யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:

க. சுவாமிநாதன்
71/5 அரசடி வீதி
யாழ்ப்பாணம்.

த. தியாகராசா
[மருமகன்]
[18434]

### திருமதி மரியானா வென்ரக்கோன்

திருமதி மரியானா வென்ரக்கோன் 29-10-1991 அன்று ஜேர்மனியில் காலமானார்.

இவர் வென்ரக்கோன் அவர்களின் அன்பு மனைவியும், ஷப்பிரினா அவர்களின் அன்புத் தாயாரும், காலம் சென்ற அந்தோனிப்பிள்ளை, திருமதி திரேசம்மா அந்தோனிப்பிள்ளை, திரு. திருமதி நசரேத் அவர்களின் அன்பு மருமகளும், திருமதி பிறின்சி கிப்பெலிற், திருமதி பிளசம் டேவிட், பற்றிக், இராயப்பு, திருமதி றஞ்சனி அன்ரனிப்பிள்ளை, ஜெராட், சின்னமலர், றெக்ஸ், திருமதி லோபெனண்டோ ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிப்பொலிற், டேவிட், திருமதி யசிந்தா பற்றிக், அன்ரனிப்பிள்ளை, பெனாண்டோ ஆகியோரின் சகோதரியும், மஞ்சு, பிறேமி, சங்கி, ஆனந்தி, கோபி, அருந்தி, கார்த்திகா, நிதிலா, பமிலா, ஜென் ஆகியோரின் அன்பு மாமியும், றிஜி, ரஜீவ் ரஜீந்தி ஆகியோரின் அன்புச் சித்தியும் ஆவார்.

இவரின் ஆன்ம சாந்திக்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் 5-11-1991 காலை 6-15 இற்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திரு. பற்றிக் அந்தோனிப்பிள்ளை
இல 34/4 2 ஆம் குறுக்குத் தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம். (18432)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org